முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.222/2021**

**(LW-3) (PW -1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபி | மதம் | |
| **த.பெ.** | வேலு | தொழில் | |
| ஊர் | இந்திரா நகர் | வயது | 57 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23,10,2025 |

இன்று (23.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் இந்திரா நகரில் வசித்து வருகிறேன். விழுப்புரம் அரசு பொது மருத்துவமனை அருகில் தள்ளுவண்டியில் பழங்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலிசார் எனது பழக்கடைக்கு முன்பு வந்து ஒரு வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கினார். வேறு எதுவும் எனக்கு தெரியாது . ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறு்க்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்திரா நகரில் வசித்து வருகிறேன் என்று விழுப்புரம் அரசு பொது மருத்துவமனை அருகில் தள்ளுவண்டியில் பலன்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் என்றும் எனது கடை அருகில் தள்ளுவண்டி கடையில் இட்லி வியாபாரம் செய்து கொண்ட விழுப்புரம் அலமேலு புரத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் சண்முகசுந்தரம் என்பவர் என்னுடைய நம்பர் என்றும் 12 6 2018 தேதி மாலை சுமார் ஆறு மணிக்கு சண்முகசுந்தரம் அவர்கள் கடையில் இட்லி வியாபாரம் செய்து கொண்டு இருந்தார் என்றும் என்னுடைய தள்ளுவண்டி பழக்கடையில் என்னுடன் நான் கடையில் வேலை செய்யும் முருகன் என்பவர் பேசிக் கொண்டிருந்தார் என்றும் , அப்போது சுமார் 28 வயது மதிக்கப்பட்ட சண்முகசுந்தரம் சாப்பிடுவதற்கு இட்லி கேட்டார் என்று சண்முகசுந்தரம் ரூபாய் முப்பதுக்கு இட்லி கொடுத்தார் என்றும் இந்த நபர் அதை சாப்பிட்டுவிட்டு ஊருக்கு பார்சல் கேட்டார்கள் அதற்கு அந்த நபர் சண்முகசுந்தரத்தை ஆபாசமாக பேசி அவர்கள் பெயர் பானா சிலம்பரசன் என்றும் அவர் மீது கொலை வழக்கு உள்ளது என்றும் அவர் பெரிய ரவுடி என்றும் ஆனால் பணம் கேட்டால் உயிரோடு விடமாட்டேன் என்று கூறி காலால் சண்முகசுந்தரத்தை வயிற்றில் எட்டி உதைத்தார் என்று சண்முகசுந்தரம் கீழே விழுந்து விட்டார் என்றும் அந்த நபர் மறைத்து வைத்திருந்த கத்தியை திடீரென எடுத்து இத்தோடு சாவுடா என சொல்லி சண்முகசுந்தரத்தின் தலையில் வெட்டினார் என்றும் சடார் என்று உருண்டு படுக்கவே அந்த வெட்டு தரையில் பட்டு பின்னால் பொரி பறந்தது எனும் சண்முகசுந்தரம் உருண்டு படுக்காவிட்டால் அந்த வெட்டு அவர் தலையில் பட்டு மண்டை

இரண்டாக பிளந்து செத்துப் போய் இருப்பார் என்றும் சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள் என்றும் அந்த நபர் என்னை பிடிக்க வந்தால் இதே கதி தான் என்று கத்தியை காட்டி மிரட்டினார் என்றும் சண்முகசுந்தரம் தள்ளுவண்டி கடையை அடித்து உடைத்தார் என்றும் அதில் ரூபாய் 500 அளவுக்கு சேதம் ஏற்பட்டது என்றும் இதை பார்த்து பொதுமக்கள் இன்னும் பயந்தடித்து ஓடினார்கள் என்றும் இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் வண்டியை அங்கேயே போட்டுவிட்டு உயிர் பிழைக்க ஓடினார்கள் என்றும் நான்கு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி ஓடினார்கள் என்றும் நான் தள்ளுவண்டி தூரமாக கொண்டு சென்று நிறுத்தி விட்டேன் என்றும் கொஞ்ச நேரத்தில் அந்த நபர் அந்த வழியாக வந்த இருசக்கர வாகனம் போட்டி ஒருவரை மரித்து அதில் ஏறி தப்பி சென்று விட்டார் என்றும் நானும் முருகன் என்பவரும் அடிபட்ட சண்முகசுந்தரம் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும் இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் காவல் உண்மையை மறைத்து பொய் சாட்சி மறுக்கிறார் என்றால் சரியல்ல

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

| |
|---|
| Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.<br>Principal Subordinate Judge,<br>Villupuram |